## சீடத்துவம் : அழைத்து, தேர்தெடுத்து, அனுப்புதல்

## ஏப்ரல் 2014

## புது வாழ்வுக்கு அழைப்பு

சிந்திக்க : கிறிஸ்த்து இயேசுவை தவிர நமக்கு யாரும் புதுவாழ்வு தர முடியாது. புதுவாழ்வை பெற்றுக் கொள்ள, அனுபவிக்க இயேசு அழைக்கிறார். இந்த அழைப்பு "மேலிருந்து வருவதாகும்" இயேசு கிறிஸ்த்துவுக்குள் நாம் கருவாகி புதுப்படைப்பாக பிறந்திருக்கின்றோம். இப்புதுப் பிறப்பு நம்மை தூய்மைப்படுத்துகிறது. நம் மனதையும் சிந்தனையையும் மாற்றி அமைக்கிறது.

ஆரம்ப பாடல் : <u>அக்கினி மயமே</u>

அக்கினி மயமே பரிசுத்த ஆவியே
எரிதனலாய் எழும்பிடுவீர்
அப்பா நிரப்பிடுவீர்

அணைப்பவரே ஆறுதல் தருபவரே
அதிசயம் செய்பவரே எங்கள் துணை நீரே - அக்கினி

எந்தன் உள்ளம் பாழாய்ப் போனதையா
புதிய இதயத்தையே என்னுள் மலரச் செய்யும் - அக்கினி

ஆரம்ப செபம் : இறை இயேசுவின் பிரசன்னத்தை வேண்டி ஒருவர் செபிக்கவும்.

வாழ்வைப் பார்த்தல்

அன்பான கணவர், இரண்டு குழந்தைகள், வசதியான வாழ்க்கை இவை அனைத்தும் கடவுளின் ஆசீர் என்பது குடும்ப மாது எலனின் நம்பிக்கை. எலனின் அன்றாட காரியங்கள் அனைத்தும் கணவர், குழந்தைகளின் தேவையை நிறைவுச் செய்வதாகும். குழந்தைகளை பள்ளிக்கு, புறப்பாட வகுப்புக்கு, கூடுதல் வகுப்புக்கு அனுப்புதல் என, அவளின் எண்ணமெல்லாம் குழந்தைகளின் கல்வியில் தான். ஞாயிறன்று பிள்ளைகளை மறைக்கல்வி வகுப்புக்கு அனுப்புவதும், குடும்பத்தோடு திருப்பலியில் கொள்வதும் தவறாமல் செய்து வந்தாள். நாட்கள் கடந்தன. இவரின் இந்த அன்றாட ''இயந்திர'' வாழ்க்கைச் சூழச்சியில் அர்த்தம் காண முடியாமல் இருந்தார்.

இந்நிலையில் நண்பர்களின் ஆலோசனை ஏற்று, 7 நாள் அமைதி தியானத்தில் கலந்துக் கொண்டார். இந்த அற்புதமான வாய்ப்பினை எலன் நன்றாக பயன்படுத்திக்கொண்டார். தூய ஆவியின் அருளால் அதிக நேரம் செபத்தில் ஈடுப்பட்டார். இறைவன் தன்னைத் தொடுவதை உணர்ந்தார். தியான அனுபவத்திற்க்குப் பிறகு, வாசகம் வாசிப்பதும், ஆன்மீக புத்தகங்களை வாசிப்பதில் ஆர்வமாக இருப்பதை உணர்ந்தார். படிப்படியாக அதிசாவில் பங்கு கொண்டார். முன் வந்து பங்கு பணிகளிலும் தன்னை ஈடுப்படுத்திக் கொண்டார். அவ்வாறே அவரின் குடும்ப உறுப்பினர்களும் இயன்ற வரையில் மற்றவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து வந்தனர். எலன் புதுவாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றார்.

- கடவுள் உங்களையும் தொட்டு இருப்பார், இதனால் நீங்கள் மாற்றத்தை உணர்ந்திருப்பீர்கள். உங்கள் அனுபவத்தை பகிர்ந்துக் கொள்ளுங்கள். (இருவர் இருவராக)

இறைவனுக்கு செவிசாய்த்தல் : அருளப்பர் 3: 1 - 7

- வாசகத்தை இரண்டு முறை வாசிக்கவும்.

- வாசகத்திலிருந்து மனதைத் தொட்ட வார்த்தை அல்லது வசனத்தை இடைவெளி விட்டு மூன்று முறை சத்தமாக பக்தியோடு சொல்லவும்.

- தேர்வு செய்த வார்த்தை அல்லது வசனத்தைத் தியானிக்க இரண்டு நிமிட மௌனம் காக்கவும்.

- சிறு குழுக்களில் உங்கள் மனதைத் தொட்ட வார்த்தை அல்லது வசனத்தைப் பகிர்ந்து கொள்ளவும்.

- மேலும் பகிர்ந்து கொள்ளவும்:

    1. இயேசு கூறுகிறார்: ‘‘ஒருவர் தண்ணிராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன்’’. மேற் குறிப்பிட்ட இறைவார்த்தை எலனின் அனுபவத்திற்க்கு எவ்வாறு பொருந்துகின்றது?

    2. நாமும் எலனைப் போல் புதுவாழ்வுப் பெற வேண்டும். இயேசுவால் தொடப்பட்டு, நம் வாழ்வும் மாற வேண்டும். இதற்க்கு நாம் என்ன செய்ய வேண்டும்? பகிர்ந்துக் கொள்ளவும்.

அன்பில் வாழ்தல்

- மேலே பகிர்ந்துக் கொண்ட கருத்துக்களை பட்டியலிடவும். ‘‘புதுவாழ்வு பெற’’ நமது அதிசாவில் என்ன நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யலாம்? யார்? எப்பொழுது? எப்படி? செயல்படுத்தலாம் என்று முடிவு எடுக்கவும்.

- கடந்த மாத அதிச செயல் திட்டங்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதன் அறிக்கையை சமர்ப்பிக்கவும்.

இறுதி செபம்

ஒன்று சேர்ந்து செபிப்போம்:-

- தனிநபர்களுக்காகவும், குடும்பங்களுக்காகவும், அதிசாவுக்காகவும்,…..

- நாம் திட்டமிட்ட நிகழ்வுக்காகவும், மற்ற தேவைகளுக்காகவும்,……

இறுதிப் பாடல்: *விடுதலை நாயகன்*

விடுதலை நாயகன் வெற்றியைத் தருகிறார்
எனக்குள்ளே இருக்கிறார் என்னே ஆனந்தம்

நான் பாடிப்பாடி மகிழ்வேன் தினம்
ஆடி ஆடித்துதிப்பேன் எங்கும்
ஓடி ஓடிச் சொல்லுவேன்
என் இயேசு ஜீவிக்கிறார் x 2 - விடுதலை

அவர் தேடி ஓடி வந்தார்
என்னைத் தேற்றி அணைத்துக் கொண்டார்
என் பாவம் அனைத்தும் மன்னித்தார்
புது மனிதனாக மாற்றினார் x2 - விடுதலை

திருவழிபாடு: ஆண்டவரின் உயிர்ப்பு பெருவிழா (20 ஏப்ரல் 2014)